பக்கங்கள் : 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23

ஒலி 307 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 05 சனிக்கிழமை (22.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## இலங்கை பௌத்த நாடாக இருக்கும்வரை மட்டுமே

# ஏனைய இனத்தவர்களால் நிம்மதியாக வாழ முடியும்

## சபையில் சரத் வீரசேகர



(கொழும்பு)

- 13ஐ அடியோடு ஒழிக்க வேண்டும்.
- 22வது திருத்தத்துக்கு இணங்கமாட்டேன்
- சமஷ்டி நாடாக இலங்கை இருக்க முடியாது

பாராளுமன்றத்தில் நேற்று, அரசியலமைப்பின் 22ஆம் திருத்தச் சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார். ▶11

## சரத் வீரசேகர எதிராக வாக்களிப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 22 ஆம் திருத்தத்துக்கு சரத் வீரசேகர எம்.பி மட்டும் எதி ராக வாக்களித் தார். ▶11

## பணவீக்கம் மேலும் உயர்வு

(கொழும்பு)

செப்ரெம்பர் மாதத்திற்கான பணவீக்கம் 73.2% ஆக அதி கரித்துள்ளதாக மக்கள் தொகை மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள் ளது.

ஓகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 70.2% ▶11

# 22வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம்

## 174 மேலதிக வாக்குகளால் பாராளுமன்றில் நிறைவேற்றம்

(கொழும்பு)

**22ஆவது அரசியலமைப்பு திருத்தச் சட்டமூலம் திருத்தங்களுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் பாராளுமன்றில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப் பில் சட்டமூலத்திற்கு ஆதர வாக 174 வாக்குகள் செலுத் தப்பட்ட நிலையில் எதிராக எவ்வித வாக்குகளும் செலுத் தப்படவில்லை. ஒருவர் வாக் களிப்பைத் தவிர்த் திருந்தார். ▶11

புதிய அரசியலமைப்பு

## இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டும்



சபையில் அநுரகுமார

(கொழும்பு)

நாட்டின் பொருளாதார மற்றும் இனப்பிரச்சி ▶11

## பருப்பு மற்றும் சீனி விலை குறைவடைகின்றது

(கொழும்பு)

சந்தையில் பருப்பு மற்றும் சீனி என்பனவற்றின் விலை குறைவடைந்துள்ளது.

இதற்கமைய, கடந்த வாரம் 400 ரூபாயாக இருந்த ஒரு கிலோகிராம் பருப்பின் விலை 25 ரூபாயால் குறைக் கப்பட்டுள்ளது.

இதன்படி, பருப்பு 375 ரூபாயாக குறைந் துள்ளதாக அத்தி ▶11

யாழில் பேருந்துகளில்

## பெண்களிடம் அலைபேசி அபகரிக்கும் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பேருந்து களில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசி களை அபகரிக்கும் கும்பலைச் சேர்ந்த ▶11



## போராட்டங்களுக்கு அஞ்சியே 22வது திருத்தம் அமுலாகின்றது

சபையில் சஜித் சாடல்

(கொழும்பு)

மக்களின் போராட்டங் களுக்கு அஞ்சியே அரசாங்கம் 22ஆம் ▶11

## வாகன உதிரிப்பாகங்கள், அழகுசாதனப் பொருட்களுக்கான

### தடை நீக்கப்படவுள்ளது

(கொழும்பு)

அழகுசாதனப் பொருட்கள், வாகன உதிரிப்பாகங்கள் மற் றும் ஏற்றுமதி நோக்கிலான ஆடை உற்பத்தி மூலப் பொருட்கள் உள்ளிட்ட சில பொருட்களுக்கான இறக்குமதித் தடை ▶11

பாராளுமன்றம்

## நவம்பர் 8வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வு எதிர் வரும் நவம்பர் மாம் 8ஆம் திகதி காலை 9.30 மணிவரை ஒத்தி ▶11

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம்

## வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மழைக்கு சாத்தியம்

(கொழும்பு)

வங்காள விரிகுடாவில் ஏற் பட்டுள்ள தாழமுக்கம் காரண மாக வடக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளில் மழையுடன் கூடிய வானிலை நிலவும் சாத் தியம் உள்ளதாக வளிமண் டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் மேல், ▶10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## செல்லையா திருஞானசுந்தரம்

( ஓய்வுபெற்ற தபால் அதிபர் )



**பிறப்பு : 13.02.1946**
**இறப்பு : 21.10.2022**

கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் கிழக்கை வசிப்பிடமாகவும் பெரிய தோட்டம் கரவெட்டி மத்தியை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட செல்லையா திருஞானசுந்தரம் அவர்கள் நேற்று 21.10.2022 (வெள்ளிக்கிழமை) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ்சென்ற சின்னத்தம்பி - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சாந்தினியின் ஆருயிர்க் கணவரும் தீர்த்திகா (லண்டன்), வினோஜிதா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - தென்னை பயிர்ச்செய்கைச் சபை, பளை), ஞானரதன் (பொறியியலாளர் - சிங்கப்பூர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வாசுதேவன் (லண்டன்), சிவமதன் ( சமுர்த்தி முகாமையாளர் - சமுர்த்தி வங்கி, வரணி), கார்த்திகாயினி (ஆசிரியை - யா/வல்வை மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் வானுஜன் (லண்டன்), கிஷோர் (லண்டன்), டிலக்ஸ்சன் (லண்டன்), அம்சினி, மயூரிக்கா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சிவஞானசுந்தரம், பாலசுந்தரம் மற்றும் சகுந்தலாதேவி, சிவபாதசுந்தரம், சிவசுந்தரம், சரோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை மறுதினம் (24.10.2022) திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் பெரியதோட்டம் கரவெட்டி மத்தியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கரவெட்டி சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-5129)

பெரிய தோட்டம், கரவெட்டி மத்தி. 021 226 4281 தகவல் :- குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா தேவபரம் (வவா)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 04.05.1939 | 21.10.2022 |

கொட்டடி கற்குளத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராசா தேவபரம் (வவா) 21.10.2022 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சண்முகம் - ஆச்சிக்கண்ணுவின் மூத்த மருமகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் தகுணதாஸ் (பாபு), சுமதி (பிரான்ஸ்), கண்ணன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரதி, அருளானந்தராசா (அருள்), சொரூபா ஆகியோரின் அன்பு மாமியாரும் கபில்தேவ் (பிரான்ஸ்), கௌதம் (China), அபிநயன் (கொழும்பு), றொசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சந்திராதேவி, கமேந்திராதேவி, மற்றும் கனகராஜேஸ்வரன் (அருமை), இராசகாந்தம் (நிதி), நாகேந்திராதேவியின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நல்லையா, தவத்துரை, செல்வநாயகம், சுப்பிரமணியம் மற்றும் புஸ்பராணி ஆகியோரின் அன்பு மைத்துனியும் சரஸ்வதி, ஞானம், காலஞ்சென்ற இராசரத்தினம் (வேவி), பரஞ்சோதி (பரத்தான்), சுப்பிரமணியம் (இந்திரன்), மகாலிங்கம் (மகான்), தர்மலிங்கம் (தர்மு), பரமேஸ்வரி, பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.10.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்குளம், கொட்டடி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு:- மகன் (பாபு) 077 026 2486
மகன் (கண்ணன்) 077 611 0859
மகள் (சுமதி) 0033767694723

தகவல்: குடும்பத்தினர்

(13209)

# நினைவஞ்சலி

2ஆம் ஆண்டில்

அமரர்
## கோணையா தியாகராஜா

பிறப்பு 29.07.1930 | திதி : துவாதசி | இறப்பு 12.11.2020

9ஆம் ஆண்டில்

அமரர்
## நாகரெட்ணாம்பாள் தியாகராஜா

பிறப்பு 25.07.1933 | இறப்பு 04.05.2013



கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்
கொண்ட நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
எத்தனை ஆண்டு சென்றாலும்
உங்கள் நினைவுகள்
எங்கள் மனதை விட்டு நீங்காது.

இல. 25, புதுவீதி,
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(13200)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாளன்று பிரதமராகிறார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த?

(கொழும்பு)

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு மீண்டும் பிரதமர் பதவியை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினர்கள் இடையில் தற்போது பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு வருவதாக அந்தக் கட்சியின் உட்தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**



இதனடிப்படையில் எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவுக்கு பிரதமர் பதவி கிடைக்கும் எனக் கூறப்படுகிறது.

எதிர்வரும் நவம்பர் மாதம் 18 ஆம் திகதிக்கு பின்னர், மகிந்த ராஜபக்ஷவுக்கு நல்ல காலம் பிறக்க உள்ளதாக ஜோதிடர்கள் கூறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை எதிர்வரும் நவம்பர் 18 ஆம் திகதி மகிந்த ராஜபக்ஷவின் பிறந்ததினம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கூட்டணிக்கட்சியான மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஷ் குணவர்தன தற்போது பிரதமராக பதவி வகித்து வருகிறார்.

மகிந்த ராஜபக்ஷ பிரதமராக மீண்டும் பதவிக்கு வரும் சந்தர்ப்பம் ஏற்பட்டதால், பிரதமர் பதவியை அவருக்கு வழங்க தினேஷ் குணவர்தன இணங்கியுள்ளதாக ஏற்கனவே தகவல்கள் வெளியாகி இருந்தன என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (நி)

## இலங்கை வரும் நிலக்கரிக் கப்பல்

(கொழும்பு)

நிலக்கரி தாங்கிய கப்பல் ஒன்று எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 25 ஆம் திகதி நாட்டிற்கு வருகை தரவுள்ளதாக நிலக்கரி நிறுவனத்தின் பொது முகாமையாளர் நாமல் ஹேவகே தெரிவித்துள்ளார்.

நிலக்கரி கொள்வனவு தொடர்பில் ஏற்கனவே ஒப்பந்தம் செய்யப்பட்ட நிறுவனத்திடமிருந்து நிலக்கரி கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிலக்கரி கிடைக்கப்பெற்றதும் நுரைச்சோலை நிலக்கரி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகளை தடையின்றி முன்னெடுக்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)





யாழ்.மாவட்ட பண்பாட்டு பேரவையும் யாழ்.மாவட்ட செயலகமும் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் இணைந்து நடத்திய யாழ்ப்பாண மாவட்ட பண்பாட்டு விழா நேற்று வெள்ளிக்கிழமை யாழில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் யாழ்.மாவட்ட செயலர் க. மகேசன் தலைமையில் இடம் பெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம்.சமன் பந்துலசேனவும் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.வரதீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டனர். குறித்த விழாவில், "யாழ்ப்பாணம்" எனும் நூல் வெளியீடும் "இளங்கலைஞர்" விருது மற்றும் "யாழ் முத்து" விருது ஆகிய விருதுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (படங்கள்:-சிவசாந்தன்,கஜிந்தன்)


# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்




திருமதி.யோகராணி தில்லைநாதன்

(BA,PGDE,SLPS-I)

ஆரம்பக்கல்வி :- மு/துணுக்காய் அ.த.க.பா
இடைநிலை, உயர்கல்வி:-மு/மல்லாவி மத்திய கல்லூரி

## சேவைக்காலம்

கமநல சேவை நிலையம் - பெரும்போக உத்தியோகத்தர் 1989-1992 (துணுக்காய்/பாண்டியன்குளம்)

மு/மல்லாவி மத்திய கல்லூரி - ஆசிரியர் 11.01.1993-31.03.1995
மு/பாண்டியன்குளம் ம.வி - ஆசிரியர் 01.04.1995-14.09.1999
மு/பாண்டியன்குளம் ம.வி - கடமை நிறைவேற்று அதிபர் 15.09.1999-03.08.2000
மு/பாண்டியன்குளம் ம.வி - அதிபர் 04.08.2000-31.08.2002
மு/துணுக்காய் அ.த.க.பா - அதிபர் 01.09.2002-31.12.2009
மு/பாலிநகர் ம.வி - அதிபர் 01.01.2010-01.07.2015
யா/மல்லாகம் ம.வி - அதிபர் 02.07.2015-21.10.2022

ஓய்வுக்காலம் சிறப்புற அமைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/மல்லாகம் ம.வி

(13205)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## சந்தைகள், இறைச்சிக் கடைகளுக்கான 01.01.2023 - 31.12.2023 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2023

01. கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-22/10/2022 இல் இருந்து 03/11/2022 ஆம் திகதி 3.00 மணி வரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-04/11/2022 காலை 10.00 மணி வரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-04/11/2022 காலை 10.30 மணி
04. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்ட கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
05. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
06. கேள்வி திறக்கப்படும் நாளன்று ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்வி இடுதல் அவதானிக்கப்படின் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
07. கறைநிரற் பட்டியலில் காணப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. அவ்வாறு தவறுதலாக தங்களால் படிவம் பெறப்பட்டதாக கண்ட றியப்படின் அக் கேள்விப்பத்திரம் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.
08. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமைய கேள்விக் கோரிக் கைகளை சமர்ப்பிக்கப்படாதுவிடின் அதுவும் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்க பிரதேச சபையின் கேள்விச் சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
09. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது சபையின் முன் அங்கீகாரம் பெற்று எழுத்து மூலமாக நியமிக்கப்பட்ட அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
10. சந்தையின் அண்மை மையப்பகுதியிலிருந்து 01 கி.மீற்றர் தூர சுற்று வட்டாரத்தில் மீன், மரக்கறி, இறைச்சி மற்றும் சந்தைபொருட்கள் விற்பதும், சபையின் இறைச்சிக்கடையின் சூழ உள்ள பகுதியில் விற்பதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.
11. மரக்கறி, மீன் ஆகிய சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனைகளை கடைப்பிடிக்க வேண்டும் என்பதுடன், நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டதாக ஒப்பமிட வேண்டும்.
   - I. குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு (நிறுத்தற் கருவி) உற் பத்தியாளரால் தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும், தரா சுகள் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட காலத்தில் நிறுவை அளவை திணைக் களத்தினால் முத்திரையிடப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்யும் ஆவணங் கள் எச் சந்தர்ப்பத்திலும் சபைக்கு சமர்ப்பிக்க தயாராக இருத்தல் வேண்டும்.
   - II. விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக பிரதேச சபையால் தெரிவுசெய்யப்பட்ட இடமொன்றை விவசாயிகளுக்கு குத்தகைதாரரால் ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடம் இருந்து பிரதேச சபைச்சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக வீதவரியை அறவிடுதல் வேண்டும்.
   - III. குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பிரதேச சபையால் அங்கீ கரிக்கப்பட்ட பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர், திகதி, பொருளின் வகை, பொருளின் நிறை, மொத்தத் தொகை, அறவிடப்படும் வரித்தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும். பாவிக்கப்படும் பற்றுச்சீட்டு ஒவ்வொன்றுக்கும் பிரதேச சபையால் வடிவமைக்கப்பட்ட முத்திரை ஒன்றை பதித்திருத்தல் வேண்டும்.
   - IV. உற்பத்தி பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே உற்பத்தியாளராலேயே தரத்திற்கேற்பவும், விலை கூறி விற்றல் மூலமும் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். அச்சந்தர்ப்பத்தில் கட்டாயமாக குத்தகைதாரர் அவ்விடத்தில் பிரசன்னமாய் இருத்தல் வேண்டும். அல்லது குத்தகைதாரரால் எழுத்து மூலமாக கோரிக்கையை முன் வைத்து சபையால் முன் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதி ஒருவர் பிரசன்னமாக வேண்டும். ஒரே நேரத்தில் இருவரும் பிரசன்னமாய் இருத்தல் ஆகாது.
   - V. விவசாய உற்பத்தி பொருட்களுக்கு ஏல விலையின் உச்சமாக 4% (சதவீத) வரி குத்தகை ஒப்பந்ததாரரால் அறவிடப்படலாம்.
   - VI. பிரதேச சபையினால் அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் பிறிதொரு பிரதேச சபையினால் வியாபார உரிமம் பெற்று கொண்டுவரப்படும் விற்பனை பற்றுச்சீட்டிற்கு குத்தகையாளரினால் வரி அறவிடக்கூடாது. நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம்.
   - VII. சந்தைக்கு வருகை தருகின்ற நுகர்வோர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும் குத்தகைதாரரால் இச் சேவைக்காக சபையினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பற்றுச்சீட்டை வழங்கி அறவிடமுடியும்
12. இறைச்சிக் கடைகளிற்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள்
13. பிறிதொரு பிரதேசசபையின் குத்தகைதாரராக இருப்பின் இறைச்சிக்கடை நடாத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய ஆவணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.
14. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடாத்தப்படவேண்டும் சபை யின் குத்தகைதாரர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவர் நடாத்துவதாக உறுதி செய்யப்படின் குத்தகை ஒப்பந்தம் தன்னியல்பாகவே இரத்தானதாக கருதப்படும்.
15. எம்து பிரதேச சபையால் நிர்வகிக்கப்படுகின்ற கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட வேண்டும்.
16. இறைச்சிக்கான மாடுகள், ஆடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக் கப்படும் சட்ட திட்டங்களிற்கமைவாக குத்தகைதாரர் நடந்து கொள்ள வேண்டும்.
17. கொல்களம் மற்றும் இறைச்சி விற்பனைக்கு குத்தகை உரிமையாளரால் தொழிலுக்கு அமர்த்தப்படுவோர் நிலையங்களில் தொற்றுநோயற்ற உடல் ஆரோக்கியம் கொண்டவராக உள்ளார் என்பதை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி ஒருவரால் பரிசோதித்து மருத்துவ சான்றிதழ் மூலம் உறுதி செய்தல் வேண்டும்.
18. உரிய நிதி ஆண்டின் மாதாந்த கேள்விதொகையை சமனான தவணைக் கட்டணங்களாக செலுத்த வேண்டும் என்பதுடன், முதல் மூன்று மாத தவணைக் கட்டணத்தையும் தை மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி உடன்படிக்கை செய்து கொள்ள வேண்டும். அதன் பின்னர் அடுத்துவரும் மாதங்கள் 10ம் திகதிக்கு முன்னதாக மாதாந்த கேள்வி தொகையை செலுத்துதல் வேண்டும். எனினும் முற்பணம் செலுத்திய 3 மாத கேள்வி தொகையும் நிதியாண்டின் இறுதி 3 மாதங்களிற்கும் சீர்செய்யப்படும்.
19. மேற்கூறிய நிபந்தனைகளில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ மீறுவாராயின் அல்லது அக்கடைக்கான குத்தகை உடன்படிக்கையில் குறிப்பிட்ட நிபந்தனைகளை மீறி குத்தகைக்காரர் நடப்பாராயின் எந்த நேரத்திலும் குத்தகை உடன்படிக்கை முடிவுறுத்தப்படும் என்பதுடன் 1/3 பங்கு முற்பணம் மீள வழங்கப்படாது நடைபெற்ற காலப்பகுதிக்கான நிலுவையினை சட்ட நடவடிக்கை மூலம் அறவீடு செய்யவும், சபைக்கு பரிபூரண அதிகாரம் உண்டு.
20. இந் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக தெரிவு செய்யப்பட்ட குத்தகைக்காரர் சபையினால் முன்வைக்கப்படும் குத்தகை ஒப்பந்தத்தில் கையொப்பம் இட்டு அதற்கு கட்டுப்பட்டவராக செயற்பட வேண்டிய பொறுப்புடையவராகின்றார்.
21. மேலதிக விபரங்களை அந்தந்த் உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

2023 ஆம் ஆண்டு சந்தைக் குத்தகை விபரம்

| தொ. இல | குத்தகை விபரம் | 2023ஆகக் குறைந்த கேள்வித் தொகை(வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம்(1%) | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திரக் கட்டணம் | மாத வாடகை |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 1 | நெல்லியடி மரக்கறிச் சந்தை - துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் உட்பட(அங்காடி நீங்கலாக) | 9,970,400.00 | 99704.00 | 1000.00 | - |
| 2 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 234,500.00 | 2345.00 | 500.00 | - |
| 3 | கொட்டடிச்சந்தை | 33,000.00 | 330.00 | 500.00 | - |
| 4 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 56,500.00 | 565.00 | 500.00 | 100.00 |
| 5 | நெல்லியடிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,046,100.00 | 10461.00 | 500.00 | 100.00 |
| 6 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 276,100.00 | 2761.00 | 500.00 | 100.00 |
| 7 | கோயிற் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,831,500.00 | 18315.00 | 500.00 | 100.00 |
| 8 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 106,900.00 | 1069.00 | 500.00 | 100.00 |
| 9 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 606,500.00 | 6065.00 | 500.00 | 100.00 |
| 10 | நெல்லியடி மீன் சந்தை | 528,000.00 | 5280.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை | 1,337,200.00 | 13372.00 | 500.00 | - |
| 12 | அந்திரான் சந்தை | 125,400.00 | 1254.00 | 500.00 | - |
| 13 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 719,950.00 | 7199.50 | 500.00 | 100.00 |
| 14 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,799,600.00 | 17996.00 | 500.00 | 100.00 |
| 15 | நவிண்டில் சந்தை | 33,000.00 | 330.00 | 500.00 | - |
| 16 | மண்டான் சந்தை | 60,000.00 | 600.00 | 500.00 | - |
| 17 | உடுப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 220,000.00 | 2200.00 | 500.00 | 100.00 |
| 18 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 1,053,500.00 | 10535.00 | 500.00 | 100.00 |
| 19 | உடுப்பிட்டிச்சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 181,700.00 | 1817.00 | 500.00 | - |
| 20 | சாண்டா சந்தை கோழிக்கடை | 73,500.00 | 735.00 | 500.00 | 100.00 |
| | கட்டைவேலி உப அலுவலகம் | | | | |
| 21 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 51,500.00 | 515.00 | 500.00 | 100.00 |
| 22 | துன்னாலை வடக்குச் சந்தை | 74,500.00 | 745.00 | 500.00 | - |


தவிசாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி.

(C-5127)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடபகுதியில் சீனாவின் ஊடுருவல் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்

## இனியாவது அரசு அவதானம் செலுத்த வேண்டும் என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்



(யாழ்ப்பாணம்)

இலங்கையின் வடக்குப் பகுதியில் சீனாவை அனுமதித்துள்ளமை பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும் என ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் க.பிரேமச்சந்திரன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் இந்தோ-பசுபிக் பிரதேசத்திலும் அமைதியையும் சமாதானத்தையும் பேணுவதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் சீனாவின் வல்லாதிக்க போட்டிக்கு இலங்கையை பயன்படுத்த இடமளிக்க வேண்டாம் என்றும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில்,சீனாவின் நடவடிக்கைகள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன.

சர்வதேச தளங்களில் தமிழ் மக்களுக்கு எதிராகவும் இலங்கை அரசாங்கத்திற்கு ஆதரவாகவும் செயற்பட்டு வரும் சீனா, வடக்கு மாகாணத்தில் தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படுவது போன்று ஒரு தோற்றத்தை ஏற்படுத்த முயற்சிப்பது தமிழ் மக்களை ஏமாற்றுவதற்காகவே.

வட மாகாணத்தில் சில நூறு மீனவர்களுக்கு உலர் உணவுப் பொதிகளைவழங்குவதும் பல்கலைக்கழகத்திற்கு சில இலட்சம் ரூபாய்களைக் கொடுத்து மாணவர்களின் நலன்பேணுவதும் இவற்றுடன் கடல் அட்டைப் பண்ணைகள் அமைத்தல் போன்ற நடவடிக்கைகளில் சீனநாட்டின் உளவுப் பிரிவினர் செயற்படுவதாகவும் பேசப்படுகின்றது.

தமிழ் நாட்டின் புலனாய்வுப் பிரிவினர் இலங்கையின் வடமாகாணத்தில் சீருடைஅணியாத சீன இராணுவத்தினரின் நடமாட்டம் அதிகரித்திருப்பதாகவும் தமிழகத்திற்குள் அவர்களது ஊடுருவல் ஏற்படலாம் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

வடக்கு மாகாணத்திற்குள் சீனாவின் சகலவிதமான நடவடிக்கைகளையும் இலங்கை அரசாங்கம் கட்டுப்படுத்தவேண்டும். அவ்வாறுகட்டுப்படுத்தத் தவறினால் அது பெரும் பின்விளைவுகளை எதிர்காலத்தில் ஏற்படுத்தலாம் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# ஏலவிற்பனை பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவிருந்த பிராந்திய மணல் ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தினால் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி பிற்போடப்பட்டுள்ளது என பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (நி-6)




# இராசிபலன்

22.10.2022
ஐப்பசி 05, சனிக்கிழமை
துவாதசி பிற்பகல் 5.26மணிவரை

பூரம் பிற்பகல் 1.55 மணிவரை
சுபநேரம் -3.02-4.32 மணிவரை
இராகுகாலம்- 9.02-10.32மணிவரை

சனிப்பிரதோச விரதம்
சந்திராஷ்டமம் -அவிட்டம், சதயம்.

வள்ளவன்

**மேஷம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், உறவினர் விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, இனிமையான அனுபவங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** — தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்களின் சிறந்த யோசனைக்கு பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள்.

**துலாம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

**மகரம்** — புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, ரோக பயமுண்டு, மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள்.

**ரிஷபம்** — பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம், பெற்றோரின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** — அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், கௌரவமிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், இறைவழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** — தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** — கௌரவமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** — பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், இழுபறியாக இருந்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**கன்னி** — பணிகளில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறும்.

**தனுசு** — தொழில் நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும்.

**மீனம்** — உடல் நலனில் இருந்த பாதிப்புக்கள் அகலும், அச்சத்தை விட்டு சாதித்துக் காட்டும் நாள், போசன சுகமுண்டு, கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

தீய எண்ணங்களை உனக்குச் சொந்தமாக்கி கொள்ளாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 08





அதைப் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவ கோஷ்டியார் மேலும் ஆர்ப்பரித்தார்கள். ஆழ்வார்க்கடியான் வீர சைவருடைய பக்கமாகத் திரும்பி, "ஓய் பாததூளி பட்டரே! நீர் என்ன சொல்லுகிறீர்? மேலும் வாதம் செய்ய விரும்புகிறீரா? அல்லது சுவாமியாரைப் போல் நீரும் ஓட்டம் எடுக்கிறீரா?" என்றான்.

"நானா? ஒரு நாளும் நான் அந்த வாய் வேதாந்தியைப் போல் ஓட்டம் எடுக்கமாட்டேன். என்னையும் உம்முடைய கண்ணன் என்று நினைத்தீரோ? கோபியர் வீட்டில் வெண்ணெய் திருடி உண்டு மத்தால் அடிபட்டவன் தானே உம்முடைய கண்ணன்!..." என்று பாததூளிபட்டர் சொல்வதற்குள், ஆழ்வார்க்கடியான் குறுக்கிட்டான். "ஏன் காணும்? உம்முடைய பரமசிவன் பிட்டுக்கு மண் சுமந்து முதுகில் அடிபட்டதை மறந்து விட்டீரோ?" என்று கேட்டுக் கொண்டு கைத்தடியை வீசிக் கொண்டு வீர சைவர் அருகில் நெருங்கினான்.

ஆழ்வார்க்கடியான் நல்ல குண்டாதி குண்டன். வீர சைவராகிய பாததூளிபட்டரோ சற்று மெலிந்த மனிதர். மேற்கூறிய இருவரையும் விவாதத்தில் உற்சாகப்படுத்தி வந்தவர்கள் தாங்களும் கைகலக்க ஆயத்தமாகி ஆரவாரம் செய்தார்கள்.

இந்த மூடச் சண்டையைத் தடுக்க வேண்டும் என்ற எண்ணம் வல்லவரையன் மனதில் உண்டாயிற்று. அவன் நின்ற இடத்திலிருந்து சற்று முன்னால் வந்து "எதற்காக ஐயா நீங்கள் சண்டை போடுகிறீர்கள்? வேறு வேலை ஒன்றும் உங்களுக்கு இல்லையா? சண்டைக்குத் தினவு எடுத்தால் ஈழ நாட்டுக்குப் போவதுதானே? அங்கே பெரும் போர் நடந்து கொண்டிருக்கிறதே?" என்றான்.

நம்பி சட்டென்று அவனைத் திரும்பிப் பார்த்து "இவன் யாரடா நியாயம் சொல்ல வந்தவன்!" என்றான். கூட்டத்திலே இருந்தவர்களில் சிலருக்கு வந்தியத்தேவனுடைய வீரத்தோற்றமும் அவனுடைய அழகிய முகவிலாசமும் பிடித்திருந்தன. "தம்பி! நீ சொல்லு! இந்தச் சண்டைக்காரர்களுக்கு நியாயத்தை எடுத்துச் சொல்லு! உனக்குப் பக்க பலமாக நாங்கள் இருக்கிறோம்" என்று அவர்கள் சொன்னார்கள்.

"எனக்குத் தெரிந்த நியாயத்தைச் சொல்கிறேன். சிவபெருமானும் நாராயணமூர்த்தியும் தங்களுக்குள் சண்டை போட்டுக் கொள்வதாகத் தெரியவில்லை. அவர்கள் சிநேகமாகவும் சுமுகமாகவும் இருந்து வருகிறார்கள். அப்படியிருக்க, இந்த நம்பியும் பட்டரும் எதற்காகச் சண்டை போட்டுக்கொள்ள வேண்டும்?" என்று வல்லவரையன் கூறியதைக் கேட்டு அக்கூட்டத்தில் பலரும் நகைத்தார்கள்.

அப்போது வீரசைவப்பட்டர், "இந்தப் பிள்ளை அறிவாளியாகவே தோன்றுகிறான். ஆனால் வேடிக்கைப் பேச்சினால் மட்டும் விவாதம் தீர்ந்துவிடுமா? சிவபெருமான் திருமாலை விடப் பெரிய தெய்வமா, இல்லையா என்ற கேள்விக்கு இவன் விடை சொல்லட்டும்!" என்றார்.

"சிவனும் பெரிய தெய்வந்தான்; திருமாலும் பெரிய தெய்வந்தான். இருவரும் சமமான தெய்வங்கள். யாரை வேண்டுமானாலும் தொழுது கொள்ளுங்கள் சண்டை எதற்கு?" என்றான் வல்லவரையன்.

"அது எப்படிச் சொல்லலாம்? சிவனும் விஷ்ணுவும் சமமான தெய்வங்கள் என்று சொல்லுவதற்கு ஆதாரம் என்ன?" என்று ஆழ்வார்க்கடியான் அதட்டிக் கேட்டான். "ஆதாரமா? இதோ சொல்கிறேன்! நேற்று மாலை வைகுண்டத்துக்குப் போயிருந்தேன். அதே சமயத்தில் பரமசிவனும் அங்கே வந்திருந்தார். இருவரும் சம ஆசனத்தில் அமர்ந்திருந்தார்கள். அவர்களுடைய உயரம் ஒன்றாகவே இருந்தது. ஆயினும் ஐயத்துக்கு இடமின்றி என் கையினால் முழம் போட்டு இருவர் உயரத்தையும் அளந்து பார்த்தேன்..."

"அட பிள்ளாய்! பரிகாசமா செய்கிறாய்?" என்று ஆழ்வார்க்கடியான் கர்ஜனை செய்தான். கூட்டத்தினர், "சொல்லு, தம்பி! சொல்லு!" என்று ஆர்ப்பரித்தார்கள்.

(தொடரும்...)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ். பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்




## நினைவில் கொள்ள வேண்டியவை

ஆசிரியரிடம் மாணவர்கள் சார்! எங்கள் நினை வில் எப்போதும் கொள்ள வேண்டிய செய்திகளைச் சொல்லுங்கள் என்று கேட்டார்கள். அப்போது ஆசிரியர் சொன்னார்.

- ஒரு கோயில் திறந்தால் இந்துக்களுக்கு மகிழ்ச்சி.
- ஒரு சர்ச் திறந்தால் கிறிஸ்தவர்களுக்கு மகிழ்ச்சி.
- ஒரு மசூதி திறந்தால் இஸ்லாமியர்களுக்கு மகிழ்ச்சி.
- ஒரு நூலகம் திறந்தால் அறிவாளிகள் அனைவருக்கும் மகிழ்ச்சி.
- ஒரு பள்ளிக்கூடம் திறந்தால் நம்மைப் படைத்த கடவுளுக்கே மகிழ்ச்சி.

## விடைத்தாளில் விடை இருக்கிறதா?

தேர்வு நேரம் மாணவர்கள் தேர்வறையில் அமைதியாக அமர்ந்திருந்தனர். ஆசிரியர் முதலில் வினாத்தாளைக் கொடுத்தார். மாணவர்கள் அமைதியாக வாங்கிக் கொண்டார்கள்.

பிறகு பதில் எழுதுவதற்கு விடைத்தாளைக் கொடுத்தார். அப்போது தேர்வறையில் சலசலப்பு ஏற்பட்டது. என்ன சலசலப்பு? என்று ஆசிரியர் கேட்டார். ஒரு மாணவன் எழுந்து நின்று இது என்ன சார்? என்று கேட்டான். ஆசிரியர் சொன்னார் Answer paper விடைத்தாள் என்றார்.

உடனே மாணவன் இவ்வளவு பெரிய மனிதன் பொய் எல்லாம் சொல்லலாமா?

நான் என்ன பொய் சொன்னேன்? ஆசிரியர் கேட்டார். Question paper என்றீர்கள் அதில் Question இருக்கிறது. Answer paper என்றீர்கள் அதில் Answer இருக்கிறதா? என மாணவன் கேட்க, ஆசிரியர் திகைத்து நின்றார்.

## புதிர் கணக்குகள்

### எத்தனை குருவிகள்

ஒரு பெரிய ஆலமரத்தில் நூறு குருவிகள் அமர்ந்து இருந்தன. அங்கு வந்த வேட்டைக்காரன் ஒருவன் நூறு குருவிகளில் இரண்டு குருவிகளைச் சுட்டு வீழ்த்தினான். அப்படியானால் அந்த மரத்தில் மீதி எத்தனை குருவிகள் இருக்கும்?

ஒரு குருவியும் இருக்காது. வேட்டைக்காரனின் வேட்டுச் சத்தம் கேட்டு எல்லாக் குருவிகளும் பறந்து போய்விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 105

இந்த ஆயுதங்கள் 1960 களில் இருந்து ரஷ்ய மற்றும் மேற்கத்தேய படைகளால் பயன்படுத்தப்படுகின்றன. அல்-காய்தா பதுங்கியிருப்பதாகக் கருதப்பட்ட ஆப்கானிஸ்தானில் உள்ள குகை வளாகங்களைத் தாக்குவதற்கு அமெரிக்கா முக்கியமாக அவற்றைப் பயன்படுத்தியது.

2000 ஆம் ஆண்டில் இந்த ஆயுதங்கள் செச்சென்யாவில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டதை அடுத்து, மனித உரிமைகள் கண்காணிப்பகம் ரஷ்யாவைக் கண்டித்தது. மிக சமீபத்தில் ரஷ்யா மற்றும் சிரியா அரசுகள், சிரியாவில் கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக தெர்மோபரிக் குண்டுகளை பயன்படுத்தியதாக சர்வதேச மன்னிப்பு சபை தெரிவித்துள்ளது.

செச்சன்யாவில் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்பட்டதைப் போலவே பெரிய உக்ரைனிய நகரங்களின் நகர்ப்பகுதிகளில் இத்தகைய ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டால் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் உயிரிழக்கக் கூடும்.




**ரஷ்யத் தாக்குதல்: இர்பின் நகரில் நாசமான குடியிருப்புப் பகுதி**

கடந்த வாரம் உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் தொடங்கியதில் இருந்து நடத்தப்பட்ட தாக்குதல்களில் இர்பின் என்ற உக்ரைனிய நகரம் நாசமானது என்கிறார்கள் உக்ரைன் அதிகாரிகள்,

**மார்ச் 4, 2022**

புடின் Twitter, Facebook, Voice of America, the BBC and Deutsche Welle உள்ளிட்ட ஊடகத் தளங்களுக்கு ரஷ்யாவில் தடை விதித்தார். "போலி செய்திகளை" வழங்கும் குற்றவாளிகளுக்கு 15 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை வழங்கக்கூடிய குற்றச் சட்டத்தில் அவர் கையெழுத்திட்டார்.

Zaporizhzhயை அணுமின் நிலையத்தில், ஆலை தளத்தில் ஓர் எறிகணை தாக்கியது. உலைகளின் பகுதிகள் இல்லாத ஒரு கட்டடத்தில் தீ ஏற்பட்டது. உக்ரைனின் அணுசக்தி ஒழுங்குமுறை ஆய்வாளர்கள் கதிர் வீச்சு அளவுகளில் எந்த மாற்றமும் இல்லை என்றும் பல மணி நேரங்களுக்குப் பிறகு தீ அணைக்கப்பட்டதாகவும் தெரிவித்தனர். கட்டடத்தின் யூனிட் 6 இன் மின்மாற்றி சேதமடைந்தது. மூன்று உக்ரைனிய வீரர்களைக் கொன்ற போருக்குப் பிறகு, ரஷ்ய துருப்புக்கள் மின் உற்பத்தி நிலையத்தை ஆக்கிரமித்தன.

நாடு முழுவதும் பறக்க தடை மண்டலத்தை விதிக்க நேட்டோவிடம் உக்ரைன் வேண்டுதல் விடுத்தது. நேட்டோ பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் உக்ரைனின் கோரிக்கையை நிராகரித்தார். அது ரஷ்யாவுடன் ஒரு முழுமையான போருக்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

(தொடரும்)

# பாணி மருந்து அருந்தி 100 குழந்தைகள் உயிரிழப்பு

## இந்தோனேசியாவில் துயரம்

(ஜகர்த்தா)

**இந்தோனேசியாவில் சிரப் மற்றும் மருந்து திரவங்களால் சுமார் 100 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து, நாட்டில் சிரப் மற்றும் மருந்து திரவங்கள் விற்பனையை தடை செய்ய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.**

காம்பியாவில் 70 குழந்தைகள் இருமல் சிரப் வகையினால் உயிரிழந்துள்ளதாக தெரியவந்ததை அடுத்து இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தோனேசிய அதிகாரிகள் குழந்தைகளின் மரணம் குறித்து விசாரணை நடத்தியதில், சிரப் ஒன்றில் சிறுநீரக பாதிப்பை ஏற்படுத்தும் இரசாயனம் கலந்திருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனால் 100 குழந்தைகள் உயிரிழந்துள்ளதாக கூறப்படுகிறது. மருந்து உள்ளூர் தயாரிப்பா அல்லது வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இந்தோனேசிய அதிகாரிகள் 200 குழந்தைகளை பரிசோதித்ததில் அவர்களுக்கு பல்வேறு சிறுநீரகக் கோளாறுகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அவர்களில் பெரும்பாலானோர் 5 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

# 41 ஆண்டுகளின் பின்னர் ஏலத்திற்கு வரும் சார்லஸ்- டயானாவின் திருமணக் கேக்





(லண்டன்)

கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்து நாட்டின் இளவரசர் சார்லஸ் மற்றும் டயானா திருமணம் நடந்த நிலையில் இந்த திருமணத்தின் போது வெட்டப்பட்ட கேக் துண்டு தற்போது ஏலம் விடப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கேக்கை அந்தத் திருமணத்தில் கலந்து கொண்ட ஒருவர் பாதுகாத்து வைத்திருந்தார் என்பதும் இந்த கேக் துண்டு தான் தற்போது ஏலம் விடப்போவதாகவும் கூறப்படுகிறது.

இந்தத் திருமணத்தில் கலந்து கொண்ட இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த நைஜல் என்பவர் கடந்த ஆண்டு காலமானார். அவர் இந்த திருமணத்தில் கலந்து கொண்ட போது அவருக்கு வழங்கப்பட்ட கேக்கை பாதுகாப்பாக கடந்த 41 ஆண்டுகள் வைத்திருந்தார்.

அவரது இறப்பிற்குப் பின் தற்போது இந்த கேக் துண்டை ஏலம் விடப்போவதாக செய்தி வெளியாகியுள்ளது.

இந்தக் கேக் 300 இங்கிலாந்து பவுண்டுகள் மதிப்பு என விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும் இந்தத் துண்டு இலட்சக்கணக்கில் ஏலம் போகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# பிரித்தானிய பிரதமர் பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ளதாக போரிஸ் அறிவிப்பு


(லண்டன்)

பிரித்தானிய பிரதமர் பதவியில் இருந்து லிஸ் டிரஸ் விலகியதையடுத்து அப்பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ளதாக போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார்.

முன்னாள் பிரதமரான அவர் கொவிட் ஊரடங்கு விதிமுறைகளை மீறியதாக முறைப்பாடு வந்ததையடுத்து பதவி விலகியிருந்தார். இதனையடுத்து அவருடைய பொறுப்புக்கு லிஸ் டிரஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

எனினும் அவர் கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமைத்துவத்திலிருந்து விலகுவது குறித்து மன்னர் மூன்றாவது சார்லஸ்க்கு அறிவித்துள்ளதாக நேற்று முன்தினம் தெரிவித்தார். இந் நிலையிலேயே, பிரித்தானிய பிரதமர் பதவிக்கு மீண்டும் போட்டியிடவுள்ளதாக போரிஸ் ஜோன்சன் அறிவித்துள்ளார். அதேநேரம், இந்திய வம்சா வழியைச் சேர்ந்த ரிஷி சுனக்கும் போட்டியிடவுள்ளதாக முன்னர் அறிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்டைதீவு பிரதேச மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கம் கடந்த 18 அம் திகதி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. அப்பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி மருத்துவர் வி.தவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் மண்டைதீவுப் பங்குத்தந்தை டேவிட் அடிகளார் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். இதன்போது நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

## சீரற்ற காலநிலை காரணமாக அதிகரிக்கும் டெங்கு நோயாளர்கள்

(கொழும்பு)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

டெங்கு நோயாளர்கள் பெருமளவில் மேல் மாகாணத்தில் காணப்படுவதாக டெங்கு நோய் ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

இந்த வருடத்தில் இதுவரையில் 61, 391 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் மருத்துவர் சுதத் அமரவீர மேலும் தெரிவிக்கையில்,

தற்பொழுது பருவப்பெயர்ச்சி காலநிலையுடனான மழையினால் நுளம்புகள் பெருகக் கூடிய இடங்களில் நீர் தேங்குவதால் மீண்டும் நுளம்புகள் பெருகும் அபாயம் உண்டு.

2019 ஆம் ஆண்டில் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

இதேபோன்று கடந்த 10 மாதங்களில் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். அடையாளம் காணப்பட்ட 31 சுகாதார மருத்துவ பிரிவுகளில் டெங்கு நோய் அனர்த்த நிலை காணப்படுகின்றது.

எனவே 24 மணித்தியாலயத்திற்கு மேலாக காய்ச்சல் இருக்குமாயின் மருத்துவரை நாட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

## விடைத்தாள் திருத்தும் பணிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி நீடிப்பு

(கொழும்பு)

2022 ஆம் கல்வி ஆண்டுக்கான கல்வி பொதுத் தராதர உயர்த்தரப் பரீட்சையின் விடைத்தாள்களை திருத்தும் ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான திகதி நீடிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது இதற்கமைய குறித்த விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான திகதி எதிர்வரும் நான்காம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அந்தத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (நி)


### அத்துகோரளவின் குடும்பத்திற்கு 10 மில்லியன் ரூபாய் நட்டஈடு

படுகொலை செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அத்துகோரளவின் குடும்பத்திற்கு 10 மில்லியன் ரூபாய் நட்டஈடு வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய பிரதமர் தினேஷ் குணவர்த்தன இதனைத் தெரிவித்துள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி

யா/வளலாய் அ.மி.த.க பாடசாலை அதிபர் திரு.க.இரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர். கந்தையா கணபதிப்பிள்ளை



அவர்கள் 21.10.2022 அன்று இறைபதமடைந்துள்ளார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

(13215)

கோட்டக் கல்விப் பணிப்பாளரும்
அதிபர்கள் சங்கமும்
கோப்பாய்க் கல்விக் கோட்டம்.



# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 22.09.2022 வியாழக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர். சின்னையா லோகேஸ்வரி



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 20.10.2022 வியாழக்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 22.10.2022 சனிக்கிழமை காலை 09.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(13214)

கரந்தன்,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

குடும்பத்தினர்
077 4186 860


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களிடம் அறிவொளி இருந்தால் அந்த தீபத்திலிருந்து மற்றவர்கள் மெழுகுவர்த்தியை ஏற்றிக் கொள்ளட்டும்.

– கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் அரசியல் பலயீனமாகவே உள்ளது

தமிழகத்தைச் சேர்ந்த மருத்துவர் காந்தராஜ் மிகச்சிறந்த அரசியல் திறனாய்வாளர்.

அவரின் அரசியல் திறனாய்வும் எதிர்வு கூறல்களும் மக்களின் கவனத்தை ஈர்க்க வல்லவை.

எதையும் நறுக்காகக் கூறிவிடக்கூடிய அவர் ஈழத் தமிழ் மக்கள் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர்.

ஈழத்தில் தமிழ் வாழ்கிறது எனத் துணிந்து கூறியவர்.

தவிர, விடுதலைப் புலிகளின் போராட்டத்தை நியாயப்படுத்துபவர்.

ஒருமுறை விடுதலைப் புலிகள் பற்றிய தனது கருத்துரைப்பில் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மிகச்சிறந்த வீரன்.

ஒழுங்கு கட்டுப்பாட்டுடன் தனது அமைப்பை வழிப்படுத்தியவர்.

இராணுவ மூலோபாயங்களில் மிகப் பெரும் தேர்ச்சி பெற்றிருந்த விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் அரசியல் பக்கத்தை பார்க்கத் தவறியமை மிகப்பெரும் இழப்பாகிப் போயிற்று எனக் கூறியிருந்தார்.

மருத்துவர் காந்தராஜின் மேற்போந்த கருத்து நம் தமிழ் அரசியல் தலைவர்களிடம் எந்தளவு தூரம் வந்தடைந்தது என்பது நமக்குத் தெரியாதாயினும்,

இன்னமும் எம் ஈழத் தமிழர்களின் அரசியல், பலயீனமாகவும் வெளி உலகம் அங்கீகரிக்காததாகவும் இருப்பது மறுக்க முடியாத உண்மை.

இவ்வாறான நிலைமைக்குக் காரணம் யாது என்று நாம் வினவும்போது எங்கள் தமிழ்ப் புலத்தில் சரியான அரசியல் தலைமை இல்லாதமை மிகப்பெரும் குறைபாடாக உள்ளது.

நேர்மையுடனும் விசுவாசத்துடனும் தமிழ் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணிக்க வல்ல ஆளுமை மிகுந்த ஒருவரே நல்ல அரசியல் தலைவராக இருக்க முடியும்.

அந்தவகையில் ஆயுதப் போராட்டத்தில் பிரபாகரன் எனும் உயரிய தலைவனை ஈழத் தமிழ் மக்கள் பெற்றிருந்தாலும் அரசியல் களத்தில் தமிழர்களுக்கு நேர்மையான தலைவர்கள் சமகாலத்தில் கிடைக்கவில்லை என்ற உண்மையை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

அதேவேளை அத்தகையதொரு தலைமையை உருவாக்குகின்ற முயற்சியில் தமிழ் மக்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் முயற்சிக்கவில்லை என்ற மெய்மையையும் இங்கு உரைத்தாக வேண்டும்.

ஆம், நம் தமிழ் மக்களுக்கு கனதியான அரசியல் தலைமை இருந்திருக்குமாயின், எங்களின் குரல் உலக அரங்கில் வலிமை பெற்றிருக்கும்.

இன்றிருக்கக்கூடிய சூழ்நிலையில் உலக சம்பிரதாயத்தின் அடிப்படையிலேயே ஈழத் தமிழ் மக்களின் விடயம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

மாறாக இலங்கையில் நடந்த தமிழின அழிப்பு என்ற விவகாரம் பேரவையில் ஒத்திவைக்கப்பட்டு காலம் கடத்தப்படுகின்ற அளவிலேயே இன்னமும் இருக்கிறது எனும்போதுதான் எங்கள் அரசியல் பக்கத்தின் பலயீனம் எவ்வளவு மோசமாகவுள்ளது என்ற உண்மை தெரியவரும்.

## போலித் தாள்கள் பயன்பாட்டில் உள்ளதால் அவதானமாக இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பல பகுதிகளில் அண்மை நாட்களாக போலித் தாள்களை பயன்படுத்தி பொருட்கள் கொள்வனவில் சில விஷமிகள் ஈடுபட்டு வருவதாக பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனவே தற்பொழுது பண்டிகைக் காலம் ஆகையால் வர்த்தக நிலையங்களிலும் மற்றும் பொதுமக்கள் கூடும் இடங்களிலும் 5000 ரூபாய் போலித் தாள்களைப் பயன்படுத்தி பொருள் கொள்வனவில் ஈடுபட முயற்சிப்பார்கள்.

எனவே மக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறும் சந்தேகப்படும் வகையில் எவராயினும் இனங்காணப்பட்டால் உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திலோ அல்லது அவசர தொலைபேசி அழைப்பின் ஊடாகவோ பொலிஸாருக்கு தகவல் வழங்குமாறு தருமபுரம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

(நி-6-316)

## தொடர் திருட்டில் ஈடுபட்ட நபரை கைது செய்த பொலிஸார்

(கரணவாய்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள சந்தைகள் மற்றும் வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞன் நெல்லியடி பொலிஸாரால் நேற்று வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி சந்தையில் உருளைக்கிழங்கு மற்றும் வெங்காயத்தை திருடிச் செல்ல முற்பட்ட நிலையில் குறித்த நபரை நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர் கிளிநொச்சி பகுதியைச் சேர்ந்த 23 வயது உடைய இளைஞராவார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் நெல்லியடியில் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள், நெல்லியடி மின்னியல் வர்த்தக நிலையத்தில் திருடப்பட்ட வயர் ரோல் மற்றும் பருத்தித்துறை நகரில் வாகன உதிரிப் பாக விற்பனை நிலையத்தில் திருடப்பட்ட ஒயில் மற்றும் தேங்காய் எண்ணெய் பரல்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

குறித்த இளைஞனுக்கு எதிராக யாழ்.பொலிஸிலும் முறைப்பாடு இருப்பதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். (நி-6-60)

## பொதுத்தகவல் தொழில்நுட்ப பரீட்சைக்கு விண்ணப்பித்தல் தொடர்பாக

(யாழ்ப்பாணம்)

பொதுத்தகவல்தொழில்நுட்பப் பரீட்சை விரைவில் நடத்தப்படவிருப்பதால் தோற்றவுள்ள (A/L) 2020 பிரிவு, (A/L) 2021 பிரிவு மாணவர்களில் இதுவரை பரீட்சைக்கு தோற்றுவதை உறுதிப்படுத்தாத மாணவர்கள் உடனடியாக பாடசாலைக்கு சமூகமளித்து விபரங்களை ஒப்படைக்குமாறு யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அதிபர் திருமதி. இ.முத்துக்குமரன் அறிவித்துள்ளார்.(நி-6)

## தீபாவளியன்று மின்தடை அமுலாகாமலிருக்க நடவடிக்கை

தீபாவளி தினத்தன்று மின்தடையை அமுலாக்காதிருக்க நடவடிக்கை எடுப்பதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 3 தினங்களுக்கான மின் தடை அறிவித்தலை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் நேற்று மாலை அறிவித்தார்.

இதன்படி, இன்று மற்றும் நாளை A,B,C,D,E,F, G,H,I,J,K,L,P,Q,R,S,T,U, V,W ஆகிய வலயங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கு மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியினுள் 1 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்துண்டிப்பு மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த நிலையில், தீபாவளி தினத்தன்றும் மின் தடை அமுலாக்கப்படுமா? என்பது குறித்து பொதுப் பயன்பாடுகள் ஆணைக் குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் தாம் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி உள்ளதாகவும், பெரும்பாலும் தீபாவளி தினத்தன்று மின்சாரம் துண்டிக்கப்பட மாட்டாது எனவும் குறிப்பிட்டார். (ம)

## மிருசுவிலில் ரயில் மோதியதில் கன்றுத்தாச்சி பசு உயிரிழப்பு

(மிருசுவில்)

மிருசுவில் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை ரெயில் மோதியதில் கன்றுத்தாச்சி பசு ஒன்று உயிரிழந்ததுள்ளது.

பிற்பகல் அப்பகுதியில் துர் நாற்றம் வீசுவதை உணர்ந்த அயலவர்கள் சென்று பார்த்த போதே நிறைமாத கன்றுத்தாச்சி பசு உடல் சிதறி கன்றுக் குட்டியும் உயிரிழந்த நிலையில் காணப்பட்டதையடுத்து உரிய முறைப்படி புதைத்தனர்.

மிருசுவில் பகுதியில் அண்மைக்காலமாக 30 வரையான மாடுகள் ரெயினில் மோதுண்டு உயிரிழந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-60)

## டிசெம்பர் 1 ஆம் திகதியுடன் இரண்டாம் தவணை நிறைவு

### கல்வி அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதலாம் திகதியுடன் இந்த ஆண்டுக்கான இரண்டாம் தவணை பாடசாலை கற்கைகள் நிறைவடையவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

டிசெம்பர் 2 ஆம் திகதி ஆரம்பிக்கும் இரண்டாம் தவணை விடுமுறை 4 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாகவும் அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

மூன்றாம் தவணையின் முதலாம் கட்டம் டிசெம்பர் 5ஆம் திகதி முதல் டிசெம்பர் 22 ஆம் திகதி வரை இடம்பெறும்என்றும் அதன்பின்னர் டிசெம்பர் 23ஆம் திகதி முதல் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி வரை நத்தார் பண்டிகைக்காக பாடசாலை விடுமுறை வழங்கப்படவுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்காக 2023 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 2 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி நிறைவடையும்.

பெப்ரவரி 16 ஆம் திகதி முதல் பெப்ரவரி 28 ஆம் திகதி வரை மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டத்துக்கான விடுமுறை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மூன்றாம் தவணையின் மூன்றாம் கட்டத்தை மார்ச் முதலாம் திகதி தொடக்கம் மார்ச் 21 ஆம் திகதி வரை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (நி)

## தீபாவளி தினத்தன்று பதுளை, நுவரெலியாவில் மதுசாலைகளுக்கு பூட்டு

தீபாவளி தினத்தன்று பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் உள்ள மதுபானசாலைகளை மூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைக்கு அமைய இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக .மதுவரித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

இதற்கமைய பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை மற்றும் ரிதிமாலி பிரதேச செயலகங்கள் தவிர்ந்த சகல பகுதிகளிலும் அன்றைய தினம் மதுபானசாலை மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் எதிர்வரும் 8ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அதன் பின்னர் டிசம்பர் மாதம் 10ஆம் திகதி வரை வரவு செலவுத்திட்டம் மீதான விவாதத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று பிற்பகல் பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பாராளுமன்ற விவகாரங்களுக்கான குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரிசி இறக்குமதியால் ஆலை உரிமையாளர்கள் பாதிப்பு

(நெளுக்குளம்)

வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதால் உள்ளூர் விவசாயிகளிடம் நெல்லை கொள்வனவு செய்த நெல் ஆலை உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வவுனியா மாவட்ட நெல் ஆலை உரிமையாளர்கள் தெரிவிக்கையில்,

விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல்லை தற்போது அரிசி ஆலை உரிமையார்கள் குறித்த விலைக்கு விற்பனை செய்ய முடியாமையினால் அரிசி ஆலைகளில் அரிசி தேங்கி கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந் நிலையில் வெளிநாடுகளில் இருந்து அரிசியை இறக்குமதி செய்வதனால் ஆலை உரிமையாளர்கள் மாத்திரமின்றி விவசாயிகளும் பெரும் பாதிப்பை எதிர் கொண்டுள்ளனர்.

இதன் காரணமாக கால போக செய்கை ஆரம்பித்துள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் நெல் ஆலை உரிமையாளர்கள் நெல்லை கொள்வனவு செய்ய முடியாத நிலை ஏற்படும்.

இதனால் விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என மேலும் தெரிவித்தனர். (நி-6-299)





யாழ்.போதனா மருத்துவமனையினுள் அத்துமீறி உள்நுழைந்த இந்திய இராணுவத்தினரால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட 68 பேரின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் யாழ்.போதனா மருத்துவமனையில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

(படங்கள்-சிவ்சாந்தன், கஜிந்தன்)


# சேவை நலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்தும்




திருமதி
**சந்திரகலா ஸ்ரீதரன்**
SLTS - I

சேவைக் காலம் - 29.03.1990 - 21.10.2022

யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் சங்கீத ஆசிரியராக கடமையாற்றி 21.10.2022 இல் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி **சந்திரகலா ஸ்ரீதரன்** அவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன் அவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இந் நன்நாளில் வாழ்த்துகிறோம்.

(C-5131)

அதிபர், ஆசிரியர்கள்
யா/ அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்


# 'எமது நிலம் எமக்கு வேண்டும்' எனக்கோரி பாலாவி முகாம் மக்கள் கவனயீர்ப்பு



(மன்னார்)

வடக்கு- கிழக்கு மக்களு க்கு கௌரவமான அரசியல் தீர்வை கோரும் பயணத்தில் 82 ஆவது நாள் கவனயீர்ப்பு நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பொலிகண்டி பகுதியில் உள்ள பாலாவி முகாம் பகுதியில் இடம் பெற்றது.

குறித்த 100 நாள் செயல் முனைவின் 82 ஆம் நாள் போராட்டத்தில் பாலாவி முகாமில் உள்ள பெண்கள், ஆண்கள், இளைஞர்கள், மற்றும் சிவில் அமைப்பு பிரதிநிதிகள் எனப் பலர் கலந்து காண்டனர்.

இதன்போது தமது சொந்த நிலங்களை விட்டு பல வருடங்களாக இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள தம்மை தமது சொந்த நிலங்களில் குடியேற்ற அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

வடக்கு- கிழக்கு மாகா ணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் என்பது ஒரு ஜனநாயக உரிமையாகும். பெண்களு க்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிப் போம், எங்கள் நிலம் எமக்கு வேண்டும், இந்து மத ஆலயங்களின் இடங்களை திட்டமிட்டு சுவீகரிக்காதே என பல கோரிக்கைகளை முன் வைத்து கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (நி-6-285)

# வடக்கு உட்பட...

சப்ரகமுவ, மத்திய, வடமேல் மற்றும் வட மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களிலும் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அத்துடன், குறித்த பகுதிகளின் சில இடங்களில் 75 மில்லிமீற்றர் வரை மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் காற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படும் என்பதுடன், மின்னல் தாக்கங்கள் குறித்து அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# மனவளக்கலை பயிற்சி


(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில் யாழ். அறிவுத் திருக் கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறி முக வுரையுடன் இன்று மாலை 5 மணிக்கு இல. 81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகும்.

இந் நிகழ்வில் மூத்த பேராசிரியர் Dr. ஜெயபால் (தமிழ் நாடு இந்தியா) அவர்கள் பயிற்சிகளை வழங்குவார். (நி)


# மரண அறிவித்தல்

மலர்வு
19 - 12 - 1935



உதிர்வு
21 - 10 - 2022

## கந்தையா கணபதிப்பிள்ளை

(ஓய்வுநிலை இராணுவ தொலைத்தொடர்பு உத்தியோகத்தர்)

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் அல்வாய் மாறாம்புலத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை அவர்கள் 21.10.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அபிராமி தம்பதியினரின் அன்பு மகனும் சிதம்பரப்பிள்ளை - உமையாளின் அன்பு மருமகனும் க.நடராஜா, க.சுந்தரம், க.வல்லிபுரம், திருமதி சா.இரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசமணியின் பாசமிகு கணவரும் க.இரவீந்திரன் (அதிபர்- யா/வளலாய் அ.மி.த.க பாடசாலை), ஜோன்சன் சேகர் மகாலக்ஷ்மி(லண்டன்), க.விஸ்ணுகாந்தன்(லண்டன்), க.முகுந்தன் (ஆசிரியர் யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இ.சிவாணந்தநாயகி, செ.சேகர்(ஜோன்சன்), வி.கோணேசநிதி, மு.கிருஷ்ணாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சி.கதிரவேலு அவர்களின் மைத்துனரும் இராஜேஸ்வரியின் உடன்பிறவா சகோதரனும் வேலாயுதம் தங்கரத்தினம் அவர்களின் மைத்துனரும் புதியவன் வேலாயுதம் (வையாபுரி) அவர்களின் சகலனும் காலஞ்சென்ற கண்ணகை, ஆச்சிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை அவர்களின் பாசமிகு மைத்துனரும் கீர்த்திகன், கிஷாந்தன், சிந்துஜா, நிதுர்சிகா, பிரவின், தனுயா, டினோஷிதன், கனீசன், கார்த்திகன், தனுசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்றையதினம் சனிக்கிழமை 22.10.2022 மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாறாம்புலம்,
அல்வாய் வடமேற்கு, அல்வாய். 077 168 7557

தகவல்
குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திரு.க.இரவீந்திரன் அவர்களின் அன்புத் தந்தையார்

பிறப்பு
19 - 12 - 1935



இறப்பு
21 - 10 - 2022

அமரர். **கந்தையா கணபதிப்பிள்ளை**

அவர்கள் 21.10.2022 அன்று இறைபதமடைந்துள்ளார்.

அவரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13218)

பாடசாலைச் சமூகம், யா/வளலாய் அ.மி.த.க பாடசாலை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணவீக்கம்...

ஆக பதிவாகியிருந்தது.

இதற்கிடையில், செப்ரெம்பர் மாதத்திற்கான உணவுப் பணவீக்கம் ஓகஸ்ட் மாதத்தில் 84.6% ஆக இருந்து 85.8% ஆக அதிகரித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இனப்பிரச்சினை...

னைக்கு தீர்வு காணும் வகையில், பொருத்தமான அம்சங்களை உள்ளடக்கிய, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஒரு திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்து, அதே திருத்தத்துக்கு எதிராகவும் வாக்களிக்கும் வேடிக்கையான மனிதர்கள் இந்த பாராளுமன்றத்தில் உள்ளனர் எனவும் அவர் விமர்சித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற, அரசியலமைப்பின் 22ஆவது திருத்தச் சட்டமூல வரைபின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். (ம)

## நவம்பர் 8...

வைக்கப்பட்டுள்ளது.

22ஆவது அரசியலமைப்பு பாராளுமன்றத்தில் நிறைவேறியதைத் தொடர்ந்து பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ம)

## 22ஆவது...

இதன்படி, 174 மேலதிக வாக்குகளால் 22ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டமூலத்தின் மூன்றாம் வாசிப்பு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம)

## ஏனைய இனத்...

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர்,

இந்த நாடு பௌத்த நாடாக இருக்கும் வரையில் மட்டுமே ஏனைய இனத்தவர்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ முடியும். எனினும் வடக்கு கிழக்கு அதனை கடைப்பிடிப்பதில்லை, இதற்கு 13ஆம் திருத்தச் சட்டமே காரணம் என சரத் வீரசேகர நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியல்மைப்பின் 13ஆம் திருத்த சட்டம் எமக்கு இந்தியாவினால் வலுக்கட்டாயமாக திணிக்கப்பட்ட ஒன்றாகும். பாராளுமன்ற உறுப்பினர்களை ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் நிறுத்திவைத்து, பாதுகாப்பாக அவர்களை பாராளுமன்றத்துக்கு அழைத்துவந்து, அவர்களிடம் இராஜினாமா கடிதங்களை பெற்றுக் கொண்டே 13ஆம் திருத்தத்தை நிறைவேற்றினர். ஆகவே இதன் சுயாதீனம், புனிதத்தன்மை குறித்து எம்மத்தியில் கேள்வியே எழுகின்றது எனவும் கூறினார்.

ஐக்கியத்திற்கும் ஒற்றையாட்சிக்கும் வித்தியாசம் தெரியாத பலர் இன்று அது குறித்து கதைத்துக் கொண்டுள்ளனர். பெரிய நாடுகளில் கையாள வேண்டிய பொறிமுறைகளை இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு திணிக்க முடியாது.

நாம் சமஷ்டி நாடாக இருக்க முடியாது. 13ஆம் திருத்தம் எமது கழுத்தை நெரிக்கும் கூர்மையான கத்தியைப் போன்றது. எனவே 13ஆம் திருத்தத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும் எனவும் அவர் தெரிவித்தார்.

காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்குக் கொடுப்பது நாட்டின் ஐக்கியத்துக்கு பாரிய அச்சுறுத்தலாகும். பலவீனமான மத்திய அரசாங்கம் இருக்க வேண்டும் என்பதையே பிரிவினைவாதிகள் விரும்புகின்றனர். அதற்காகவே 13,17,19 ஆம் திருத்தங்களை கொண்டு வந்தனர்.

இதனாலேயே இந்தத் திருத்தங்களை நான் எதிர்த்தேன். ஒற்றையாட்சிக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். புதிய அரசியல் அமைப்பே இதற்கு தீர்வாகும். அதற்காகவே கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் ஆணையும் கிடைத்தது.

மேலும், 22ஆம் திருத்த சட்டத்துக்கு நான் இணங்க மாட்டேன், இது மக்களின் ஆணைக்கு முரணானது என்றார். (ம)

## சரத்...

பாராளுமன்றில் 22ஆம் திருத்த சட்டம் நேற்று [illegible] சரத் வீரசேகர [illegible] (ம)

## பருப்பு மற்றும்...

யாவசிய உணவுப் பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், 250 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் வெள்ளை சீனியின் விலை 15 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு கிலோகிராம் வெள்ளை சீனி 235 ரூபா என்ற அடிப்படையில் மொத்த விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (ம)

## போராட்டங்...

திருத்த சட்டத்தை கொண்டுவர முயற்சிக்கின்றதே தவிர, நாட்டை கட்டியெழுப்பும் உண்மையான மனநிலை அரசாங்கத்திற்கு இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ சபையில் சுட்டிக்காட்டினார். இந்த நாட்டை நாசமாக்கிய அரசாங்கம் இன்று நல்லவர்கள் போன்று கதைத்துக்கொண்டு 22ஆம் திருத்தத்தை கொண்டுவருவது வேடிக்கையானது என்றார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற விவாதத்தில் உரையாற் றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில்,

நாட்டை சிறப்பாக கட்டியெழுப்புவோம் என கூறி அரசியலமைப்பின் 20ஆம்திருத்தச்சட்டத்தை கொண்டு வந்தவர்கள், அதன் பின்னர் அதிகாரங்களை குவித்துக் கொண்டு தன்னிச்சையாக செயற்பட ஆரம்பித்தனர். இந்த சர்வாதிகார போக்கினை எதிர்த்து இலட்சக்கணக்கான மக்கள் வீதிக்கு இறங்கி அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க ஆரம்பித்ததன் விளைவாகவே இவர்கள் 22ஆம் திருத்தத்தை கொண்டு வருகின்றனர்.

ஆகவே மக்கள் போராட்டத்தின் விளைவாகவும் மக்களுக்கு அஞ்சியுமே 22 ஆம் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்றார். (ம)

## பெண்...

ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரிடமிருந்து 9 அலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் கூறினர்.

சுன்னாகத்தைச் சேர்ந்த ஒருவரே இவ்வாறு நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

அச்சுவேலி, நீர்வேலி, சுன்னாகம், பலாலி உள்ளிட்ட இடங்களில் பேருந்துகளில் பயணிக்கும் இளம் பெண்களிடம் அலைபேசிகளை சந்தேகநபர் அபகரித்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ம-33,104)

## வாகன உதிரிப்...

நீக்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியாம்பலப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தத் தடை எதிர்வரும் இரண்டு வாரங்களில் நீக்கப்பட உள்ளது.

குறித்த துறைகளின் பணியாளர்களினால் தொடர்ந்து முன்வைக்கப்படும் கோரிக்கைகளை கருத்தில் கொண்டு, மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களத்தின் பரிந்துரைகளுக்கு அமைய இந்த தடை நீக்கப்படவுள்ளது. (ம)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127



தன நிதானய
திகதி - 2022.10.21
சீட்டிழுப்பு இலக்கம் - 945
X 04 43 44 61

மஹஜன சம்பத
திகதி 2022/10/21
சீட்டிழுப்பு இலக்கம் 4915
O 3 3 7 2 8 2

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 224
துலாம் 03 24 40 42 துலாம்

மெகா பவர்
திகதி 21/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1263
B 18 07 09 26 29

கொவிசெத
திகதி 2022.10.21
சீட்டிழுப்பு இலக்கம் 3157
Z 03 28 40 65

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 21/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1370
ரிஷபம் 0 0 3 5 5 9

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1890
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.10.21
தினம் வெள்ளிக்கிழமை
S 05 23 43 63
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,584,700/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.21
சீட்டிழுப்பு இல : 4051
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,131,140/-
41 48 60 61 Q

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 238
சீட்டிழுப்பு திகதி 2022.10.21
வெள்ளிக்கிழமை
05 17 29
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,227,760/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,999,678.20
திகதி 2022-10-21
வெற்றி வாரம் 3602
வர்ணம் நீலம்
11 19 33 49
ரூ. 8,423,100/-

சுப்பர் இலக்கம் 27
C 35 30 45 53 58
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 271,189,925.80
1066
2022.10.21 வெள்ளிக்கிழமை
011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1716
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.10.21
ரூ. 3,401,940/-
10 29 37 58 U


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
(செம்மா தெரு ஒழுங்கை)
யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன்)

**021 315 5900, 077 468 3354**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

## பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

(13219)

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

# வீட்டுடன் காணி விற்பனைக்கு

நாவலர் வீதி சீரடி சாய்பாபா கோவிலுக்கு அருகாமையில் 1 பரப்பு 1/8 குழி காணி (வீட்டுடன்) விற்பனைக்கு உண்டு.

பார்வையிடும் நேரம்: ஞாயிறு பி.ப 2 மணி - 5 மணி வரை

தரகர் தேவையில்லை

(13220)

தொடர்பு - **071 207 4841**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

**0777-068-777**

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எம்மூடாக விசா வென்ற வெற்றியாளர்களை எமது V2 Travels and Tours எனும் Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

**V2 Travels 0768226240 0768226244**

## ஆங்கில வகுப்பு

ஆண்டு 2 தொடக்கம் G.C.E (O/L), G.C.E (A/L) மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வீட்டிற்கு வந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு
**076 119 9298**
**M.Rajan**

(13156)

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் பலாலி வீதியில் வியாபாரத்திற்கு உகந்த இடமும் மற்றும் 4 அறைகளுடனான பெரிய வீடும். வியாபார நிறுவனமாகவும் பாவிக்கக்கூடியது. வாடகைக்கு உண்டு.

(13222)

**074 368 0029**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 24 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

**077 911 6983**
**076 755 8606**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.